**OPEN ACCESS**

Manuscript ID:
TAM-09042025-9012

Volume: 9

Issue: 4

Month: April

Year: 2025

P-ISSN: 2454-3993

E-ISSN: 2582-2810

Received: 20.01.2025

Accepted: 22.03.2025

Published: 01.01.2025

Citation:
Rama, Mannosh. "Tholkaapiyar's Theory of Kalaviyal in 'Thenkoodu' Poetry." *Shanlax International Journal of Tamil Research*, vol. 9, no. 4, 2025, pp. 13–18.

DOI:
https://doi.org/10.34293/tamil.v9i4.9012

*Corresponding Author:
mannosh.mr@gmail.com

This work is licensed under a Creative Commons Attribution-ShareAlike 4.0 International License

# Tholkaapiyar's Theory of Kalaviyal in 'Thenkoodu' Poetry

**Mannosh Rama**
*Postgraduate Research Scholar, Department of Modern Languages*
*Faculty of Languages and Communication, Sultan Idris Education University*
*Tanjung Malim, Perak, Malaysia*
*https://orcid.org/0000-0002-0837-8839*

**Abstract**
*S.Seeni Naina Mohamed is a well-known poet and grammarian in Malaysia. In 2011, the 'Thenkoodu" Tamil Anthology book was published. This Tamil Anthology book consists of Tamil Tradition Poetries which was written by the poet Seeni Naina Mohamed himself from the year 1958 until the year 2011. The poems in this book are written based on language, sociology, nature, and 12 other themes. This book"s 'Love" themed poems have been chosen for this research. On the other hand, 'Kalaviyal" is one of the parts in Tholkappiyam"s Porulathikaram which will explain the lifestyle of lovers, the 'Aṉpiṉ aintiṇaikaḷ". It has to be said that, Tholkaappiyar"s Kalaviyal theory was identified in S. Seeni Naina Mohamed"s 'Love" themed poems in the 'Thenkoodu" Tamil Anthology book. Furthermore, Tholkappiyar has stated 4 types ofKaḷavoḻukkam, which there are Kāmam puṇarcci, Iṭantalaippaṭal, Pāṅkoṭutaḻā"al, and Tōḻiyiṟkūṭṭam. This study identifies how the Kāmam puṇarcci and Iṭantalaippaṭal were described based on Tholkappiyar"s Kalaviyal theory in those S. Seeni Naina Mohamed"s 'Love" themed poems in the 'Thenkoodu" Tamil Anthology book. Hence, this research was designed as library research and uses the qualitative method to carry out this objective. Articles and books based on Tholkaapiyar"s Kalaviyal Theory and 'Thenkoodu" Tamil Anthology book were used as the primary resources in this study.*

***Keywords:*** *Kāmam Puṇarcci, 'Love' Themed, Iṭantalaippaṭal, Thenkoodu' Tamil Anthology Book, Tholkaapiyam, S. Seeni Naina Mohammad*

## References

1. Devi, M. (2021). Multiculturalism as depicted in Theenkoodu Poetry Collection: A Study of Influence Theory. Journal of Tamil Peraivu, 10(1), 68–75.

# ‘தேன்கூடு’ கவிதைத் தொகுப்பில் தொல்காப்பியக் களவியல் கோட்பாடு – ஓர் ஆய்வு

**மனோஷ் இராமா**
முதுகலைப் பட்டப்படிப்பு ஆய்வாளர், தமிழ்ப்பிரிவு, மொழி தொடர்பியல் புலம்
சுலுத்தான் இதுரீசு கல்வியியல் பல்கலைக்கழகம், மலேசியா

**ஆய்வுச் சுருக்கம்**
*செ.சீனி னநனா முகம்மது மலேசிய நாட்டின் புகழ்பெற்ற கவிஞரும் இலக்கணியும் ஆவர். 1958–ஆம் ஆண்டு முதல் 2011–ஆம் ஆண்டு வரை இவர் எழுதிய கவிதைகள் அடங்கிய ‘தேன்கூடு’ எனும் தமிழ்க்கவிதைத் தொகுப்பு நூல் 2011–ஆம் ஆண்டில் வெளியிடப்பட்டது. இத்தொகுப்பில் அடங்கியிருக்கும் கவிதைகள் மொழி, சமூகம், இயற்கை போன்று 12 பொருண்மைகளை மையப்படுத்தி அமைந்துள்ளன. அவற்றுள் ‘காதல்’ பொருண்மையில் அமைந்த கவிதைகள் மட்டுமே இவ்வாய்விற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. தொல்காப்பியத்தின் பொருளதிகாரத்தில் ‘களவியல்’ என்ற இயல் அன்பின் ஐந்திணைகளைப் பற்றி விளக்குகின்றது. தொல்காப்பியர் காலக்கட்டத்தில் வாழ்ந்திருந்த தலைவனும் தலைவியும் பிறர் அறியாவண்ணம் அன்பில் இணைந்து களவொழுக்கம் கொண்ட முறை களவியலில் விளக்கப்பட்டுள்ளது. ‘தேன்கூடு’ தமிழ்க் கவிதைத் தொகுப்பில் இடம்பெற்றுள்ள காதற் கவிதைகளில் தொல்காப்பியக் களவியல் கோட்பாடுகள் காணப்படுகின்றன. நால்வகைப் புணர்ச்சிகளில் காமப் புணர்ச்சியும், இடந்தலைப்படலும் குறித்த களவியல் கோட்பாடுகள் மட்டுமே ‘தேன்கூடு’ கவிதைத் தொகுப்பின் காதற் கவிதைகளில் எவ்வாறு விளக்கப்பட்டுள்ளன என்பதைக் காட்சிபடுத்தும் நோக்கத்திலே இவ்வாய்வு முனைந்துள்ளது. இந்த ஆய்வு, நூலாய்வு அமைப்பில் வடிவமைக்கப்பட்டுப் பண்புசார் அணுகுமுறையை உள்ளடக்கி அமைந்துள்ளது.*

***கருச்சொற்கள்:*** *இடந்தலைப்படல், காதல் பொருண்மை, காமப் புணர்ச்சி, தேன்கூடு, தமிழ்க் கவிதைத் தொகுப்பு, தொல்காப்பிய களவியல் கோட்பாடு, தேன்கூடு, செ, சீனி நைனா முகமது.*

## அறிமுகம்

செ.சீனி நைனா முகம்மது தமிழ் இலக்கியத்தையும் இலக்கணத்தையும் மலேசியத் திருநாட்டில் வாழவும் வளரவும் வழிவகுத்தவர். இவர் மரபுவழி வந்த இலக்கிய இலக்கண அறிவுடையவர். மலேசியாவில் தொல்காப்பியக் கோட்பாடுகளை அறிமுகம் செய்வது மட்டுமின்றி மரபுக் கவிதை உலகில் தனக்கென ஒரு நிலையைக் கொண்டவராவார் (Devi, 2021). 1958 முதல் 2011 -ஆம் ஆண்டு வரை இவர் எழுதிய 200க்கும் மேற்பட்ட மரபு கவிதைகள் அடங்கிய ‘தேன்கூடு’ எனும் கவிதைத் தொகுப்பு நூல் 2011-ஆம் ஆண்டில் வெளியீடு கண்டது. இக்கவிதைத் தொகுப்பில் இடம்பெற்றுள்ள கவிதைகள் யாவும் இறைச்சிந்தனை, இயற்கை, மொழி, இலக்கியம், கலை, பெண்மை, தாய்மை, காதல், நாடு, இனம், குமுகாயம் போன்ற பொருண்மையில் அமைந்தவையாகும் (சீனி நைனா முகம்மது, 2014). இவ்வாய்வில் கவிஞரின் காதல் பொருண்மையில் அமைந்த கவிதை மட்டுமே தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன.

## தொல்காப்பியக் களவியல் கோட்பாடு

மக்களினப் பெருக்கம் ஆணும் பெண்ணும் கணவனும் மனைவியுமாய் இணைந்து வாழ்தலைச் சார்ந்தது. ஆணும் பெண்ணும் கணவனும் மனைவியுமாய் வாழ்வதற்குத் துணைபுரிவது

காதலாகும். தொல்காப்பியர் காலத்தில் தமிழகத்தில் காதல் திருமணமே வழக்கில் இருந்துள்ளது. சாதி மத நிற வேறுபாடுகளைக் கொள்ளாமல் தொல்காப்பியர் காலத் தமிழினம் காதல் மணத்தைப் போற்றியது. வயது வந்த ஆணும் பெண்ணும் தம்முள் நட்புக் கொண்டு ஒழுகிக் காதலித்தலைக் களவு என்றழைத்தனர் (இலக்குவனார், 2011).

தொல்காப்பியத்தின் பொருளதிகாரத்தில் களவியல் என்ற இயல் உண்டு. இஃது அன்பின் ஐந்திணைகளைக் கூறுகின்றது. தமிழ் வழக்காகிய இக்களவு நான்கு வகைப்படும் என இலக்கண ஆசிரியர்கள் கூறுவர். தொல்காப்பியர்,

**காமப் புணர்ச்சியும் இடந்தலைப் படலும்**
**பாங்கொடு தழா அலுந் தோழியிற் புணர்வுமென்று**
**ஆங்கநால்வகையினும் அடைந்த சார்வொடு**
**மறையென மொழிதல் மறையோர் ஆறே**
**(தொல். 1442)**

என்று கூறியுள்ளார். காமப் புணர்ச்சி, இடந்தலைப்பாடு, பாங்கற்கூட்டம், தோழியர் கூட்டம் என்ற நால்வகையும் காதல் ஒழுக்கத்தில் வரும் நான்கு கட்டங்கள் எனத் தொல்காப்பியர் கூறியுள்ளார். தொல்காப்பியர், ஒவ்வொரு கட்டத்திலும் பல நிகழ்ச்சிகள் உண்டெனவும் விளக்கியுள்ளார். காமப்புணர்ச்சி என்பது தலைவனும் தலைவியும் வேட்கை மிகுதியால் புணர்வதைக் குறிக்கும். இடந்தலைப்படுதல் என்பதானது ஊழின் வினையால் சந்தித்துக் காதல் செய்யும் காதலர்கள் தொடர்ந்து சந்தித்து இன்புறுவதைக் குறிக்கும் (மனோன்மணி தேவி அண்ணாமலை, 2019). இவ்விரண்டு கட்டங்களில் நடைபெறுகின்ற நிகழ்ச்சிகள் யாவும் இவ்வாய்வில் பேசப்பட்டுள்ளன.

## ஆய்வு நோக்கம்

காமப் புணர்ச்சியும், இடந்தலைப்படலும் குறித்துத் தொல்காப்பியக் களவியல் கோட்பாடுகள் யாவும் தேன்கூடு தமிழ்க்கவிதைத் தொகுப்பின் காதற் கவிதைகளில் எவ்வாறு விளக்கப்பட்டுள்ளன என்பதைக் காட்சிபடுத்தும் நோக்கத்திலே இவ்வாய்வு முனைந்துள்ளது.

## ஆய்வு அணுகுமுறை

இந்த ஆய்வு நூலாய்வு அமைப்பில் வடிவமைக்கப்பட்டுப் பண்புசார் அணுகுமுறையை உள்ளடக்கி அமைந்துள்ளது. தொல்காப்பியக் களவியல் கோட்பாடுகள் தொடர்பான புத்தகங்களும், 'தேன்கூடு' தமிழ்க்கவிதைத் தொகுப்பு நூலும் ஆய்வுத்தரவுகளாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன

## ஆய்வுக் கண்டுபிடிப்புகள்

### முதற் சந்திப்பு

தலைவன், பலவகைச் சிறப்புடையவளாகத் திகழும் தலைவியைக் கண்டவுடன் கொஞ்சம் ஐயப்பட்டு உண்மை நிலையை அறிய முற்படுவான். அதுவே தலைவன் இயல்புக்குச் சிறப்புடையதாகும் (இலக்குவனார், 2011). தொல்காப்பியர் இதனை,

**சிறந்துழி ஐயம் சிறந்தது என்ப**
**இழிந்துழி இழிபே சுட்ட லான**
**(தொல். களவியல். 1040)**

எனக் கூறியுள்ளார். தலைவன் தலைவியைக் கண்டவுடன் வியப்படைவானாம். வியப்போடு சேர்ந்து தலைவியின் அழகைக் கண்டவுடன் “இவள் பெண்ணல்ல, பேரழகுத் தெய்வம்”, “இவள் யாரோ”, “நிலவோ” என ஐயம் கொள்வானாம். சீனி நைனா முகம்மதுவின் காதல் கவிதைகளில் தொல்காப்பியக் கோட்பாடு காணப்படுகின்றது. அவர் எழுதிய “மானோ! மயிலோ! மாதோ!” என்ற கவிதையின் முதற் கண்ணி,

**மானோ மயிலோ மாதோ – இவள்**
**மாலைப் பொழுதின் மகளோ**
**வானம் அறியா நிலவோ**
**என்ன மாயமிதோ!**

இக்கோட்பாட்டினை உணர்த்துகிறது. கவிஞரது “இதுபோல் பார்த்ததில்லை!” கவிதையின் முதற் கண்ணியும்,

**யாரவளோ யாரவளோ தெரியவில்லை**
**என்விழியில் ஏன்விழுந்தாள் புரியவில்லை!**
**பேரெதுவோ ஊரெதுவோ கேட்கவில்லை**
**பெண்ணழகை நானிதுபோல் பார்த்ததில்லை!**

இக்கோட்பாட்டினை விளக்குகின்றது. கவிஞர் எழுதிய இவ்விரு கவிதைக் கண்ணிகளிலும்

தலைவன், தலைவியைக் கண்டவுடன் வியப்படைவதையும் தலைவியைப் பற்றி அவள் யாரோ என ஐயுறுவதையும் உணர்த்துவதையும் நோக்குக.

### விழி விருந்து

ஐம்புலன்களின் ஒன்றான கண் காதல் சந்திப்பில் முதன்மை இடத்தைப் பிடித்துள்ளது. காதலை வெளிப்படுத்தாத கண்கள் உலகில் யாருக்கும் இல்லை என்பது அறிஞர்களின் கூற்று (மாணிக்கவாசகன், 2016). திருவள்ளுவரும் "கண்ணொடு கண்ணினை நோக்கு ஒக்கின்" என உரைத்துள்ளார். தலைவனும் தலைவியும் ஒன்றுபட்டு ஒன்று கூடி இன்புறுவதற்குக் குறிப்பால் உணர்த்துவன கண்களே ஆகும். அதுவே இக்காதல் இன்பத்திற்கு ஏற்ற பாதுகாப்புக் கவசங்கள் என்று புலவர்கள் கருதுகின்றனர். களவொழுக்கதில் இத்தகைய சிறப்பு இடத்தைப் பிடித்த கண்களுக்குத் தொல்காப்பியர்,

**காமம் சொல்லா நாட்டம் இன்மையின்**
**ஏமுற இரண்டும் உள என மொழிப**
**(தொல். களவியல். 1055)**

**நாட்டம் இரண்டும் அறிவு உடம்படுத்தற்குக்**
**கூட்டி உரைக்கும் குறிப்புரை ஆகும்**
**(தொல். களவியல். 1042)**

**குறிப்பே குறித்தது கொள்ளு மாயின்**
**ஆங்கவை நிகழும் என்மனார் புலவர்**
**(தொல். களவியல். 1043)**

என மூன்று நூற்பாக்களில், காதலில் கண்களின் பங்கை விளக்கியுள்ளார். சுருங்கக்கூறின், மூன்று நூற்பாக்களும் காதல் என்பது கண்கள் பேசும் குறிப்பு மொழியும் அதன் பின் தொடர்ந்து நிகழும் களவையும் குறிக்கின்றன. சீனி நைனா முகம்மதுவின் காதல் கவிதைகளில் தொல்காப்பியக் கோட்பாடானது காணப்படுகின்றது. கவிஞர் எழுதிய "இன்பவாசல்" கவிதையின் மூன்றாவது கண்ணியில்,

**கண்கள் சொல்லும் காவியத்தை எழுதிவைக்கவோ**
**காவியப் பாவையை ஓவியமாக்கவோ**

என்றும், "இன்பத் தொல்லை!" கவிதையின் நான்காவது கண்ணியில்,

**கள்ளிஏன் மெல்லப் புரளுகின்றாள் – தன்**
**கண்ணை என் பக்கம் திருகுகின்றாள்**

என்றும், "சொல்லத் தெரியவில்லை" கவிதையில்,

**அம்பாக ஒருபார்வை வீசினாள் – அதை**
**அன்பான பார்வையால் பூசினாள்!**
**என்பார்வை விழும்போது கூசினாள் – பின்**
**ஏதேதோ வாய்க்குள்ளே பேசினாள்!**

என்றும், "பார்த்துக்கொண்டே இருக்கலாம்!" என்ற கவிதையில் கவிஞர்,

**கண்களில் அன்பின்வாசல் திறக்கிறாள் – அதில்**
**கனிந்திடும் குளிர்சிந்திக் காற்றெல்லாம் நிறைக்கிறாள்!**

என்றும் எழுதியுள்ளார். கவிஞரின் ஒவ்வொரு கவிதை அடிகளிலும் களவுக் காலத்தில் இடம்பெறும் கண்களின் குறிப்பு மொழியை உணரலாம். ஒருவர் பார்க்கும் பார்வையின் பொருள், பார்ப்பவர் காதல் குறிப்பை, பார்க்கப்படுவர் புரிந்துகொண்டு பிறகங்கே களவு தொடங்குவதைக் கவிஞர் தன் கவிதையில் தொல்காப்பியக் களவியல் கோட்பாடோடு விளக்கியிருப்பதை நோக்குக.

### சொல்லாமல் சொல்லும் குறிப்பு

சொல்லாமல் சொல்லும் குறிப்புப் பெண்களுக்கே உரிதான கலையாகும். பண்பாடும் என்றும் கூறலாம். குறிப்பால் தம் கருத்தை வெளிப்படுத்திக் கொண்டே தலைவி தம் காதல் நிறைவேற முயல்வர். தன் இணக்க விருப்பத்தைத் தலைவன் கூறியதைப் புரிந்துகொள்ளாதது போல் வெளிக்காட்டி வேறொரு குறிப்பால் தன் இணக்கதைச் சொல்வது தலைவியின் இயல்பு. இதனைத் தொல்காப்பியர்,

**சொல் எதிர் மொழிதல் அருமைத்து ஆகலின்**
**அல்ல கூற்று மொழி அவன் வயின் ஆன**
**(தொல். களவியல். 1056)**

என்கிறார். கவிஞர் தனது கவிதைகளில் இக்கோட்பாட்டைக் கையாண்டுள்ளார். சான்றாக, தனது "சொல்லத் தெரியவில்லை!" கவிதையில் கவிஞர்,

**பெண்மனம் பேச்சிலே தெரியுமோ - அவள்**
**பேசாமல் பேசினால் புரியுமோ!**

என எழுதியுள்ளார். இவ்வடியானது பெண் சொல்லாமல் சொல்லும் குறிப்பின் அழகைப் புதைநிலையாகக் குறித்துள்ளார். மேலும், கவிஞர் தனது "ஊடலுவகை" கவிதையில்,

**"என்னன்பே! உன்னழகை எவ்வளவு பார்த்தாலும்,**
**என்னாவல் தீராதே எந்நாளும்"**

என்றுரைத்தேன்.

**"இப்படியே பார்த்திருந்தால் எப்பொழுது தூங்குவதாம்?**
**எப்படிநான் நாளை எழுதுவதாம்?"**

என்றெரிந்தாள்

**"என்கண்ணே கோபமா?"**

என்றேன் அதற்கவளும்

**"பின்னென்ன வாராதா? பேசாமல் தூங்குங்கள்!"**

என்றுரைத்துப் பின்தன் இமைகள் தமைமூடி

**ஒன்றுமே பேசா துறங்குபவள் போல் நடித்தாள்**
**"ஏக்கம் வருத்தட்டும் என்னை, உனக்கென்ன?**

தூக்கம் பெரிதென்றால் தூங்கென்றே சீறினேன்.

**"ஏக்கம் மிகுந்தால்தான் இன்பம் சுவையாகும்**
**ஏக்கம் வளரட்டும், என்னத்தான்!" என்றாள்**

என்று எழுதியிருப்பது தொல்காப்பியக் கோட்பாட்டின் பயன்பாட்டையும் அதன் ஆளுகையையும் புலப்படுகின்றது. இக்கவிதை அடிகளில், தலைவன் ஏக்கம் கொள்கிறான், தலைவிற்கும் ஊடல் கொள்ள ஆசையிருப்பின், தன் விருப்பத்தை நேரடியாகச் சொல்லாமல் முதலில் நடிக்கிறாள். தலைவன் கோபம் அடைந்தபின், மீண்டும் நேரடியாகச் சொல்லாமல் இறுதியில் கொஞ்சும் மொழியில் மொழிந்து தன் விருப்பத்தை வெளிபடுத்துவதைக் காணுக. இக்கொஞ்சும் மொழியே அங்குக் கூற்று மொழியாக அமைத்த கவிஞரின் நுண்மாண் நுலைபுலத்தையும் நோக்குக.

### தலைவன் தலைவியைத் தன்வயப்படுத்துதல்

களவுக் காலத்தில் தலைவன் தலைவியைத் தன் பேச்சை அவள் செவிசாய்த்துக் கேட்டு நடக்குமாறு முயற்சி செய்வான். தொல்காப்பியர் இவற்றுள் எட்டு வகையாகப் பிரித்துத் தலைவன் கூற்று என்ற அடிப்படையில் விளக்கமளித்துள்ளார். சான்றாக,

**மெய் தொட்டுப் பயிறல், பொய் பாராட்டல்,**
**இடம் பெற்றுத் தழாஅல், இடையூறு கிளத்தல்,**
**நீடு நினைந்து இரங்கல், கூடுதல், உறுதல்,**
**சொல்லிய நுகர்ச்சி வல்லே பெற்றுழித்**
**தீராத் தேற்றம் உளப்படத் தொகைஇ**
**பேராச் சிறப்பின் இருநான்கு கிளவியும்**
**(தொல். களவியல். 1046)**

தலைவியின் உடலைத் தொட்டுப் பழகிக் கூச்சலைப் போக்குதல், புனைந்து பாராட்டல், தலைவியை நெருங்கித் தழுவுதல், தலைவி வெட்கமுற்றுத் தடுத்தலும், குறிப்புணர்ந்து கூட வராமல் தலைவி காலம் கடத்துதல், எப்போது இசைவாளோ என்று நினைந்து இரங்குதல், கூடி மகிழ்தல், உறுதி கூறித்தேற்றுதல் என எட்டு வகையான நிகழ்ச்சிகள் காமப் புணர்ச்சியில் இடம்பெறுமெனத் தொல்காப்பியர் உரைத்துள்ளார். இந்த வகை நிகழ்ச்சிகளைக் கவிஞர் தனது கவிதைகளில் கையாண்டுள்ளார். சான்றாக, கவிஞர் தனது "ஆடையானேன்!" கவிதை.

**கையைத்தான் தொட்டேன் பற்றிக்**
**கன்னத்தில் வைத்துக் கொண்டாள்**
**பையநான் இடைக்கு மேலே**
**பார்த்ததும் உடைதளர்ந்தாள்**
**மெய்யெலாம் நண்டு போல**
**மேய்ந்தன என்விரல்கள்**
**தையலாள் மெல்லச் சாய்ந்தாள்**
**தழுவிநான் ஆடையானேன்!**

தலைவன் தலைவியின் உடலைத் தொட்டுப் பழகிக் கூச்சலைப் போக்கும் நிகழ்ச்சியையும் கூடி மகிழும் நிகழ்ச்சியையும் உணர்த்துகின்றது. கவிஞரின் "ஊடலுவகை" கவிதையானது

**"இப்படியே பார்த்திருந்தால் எப்பொழுது தூங்குவதாம்?**
**எப்படிநான் நாளை எழுதுவதாம்?" என்றெரிந்தாள்**
**"என்கண்ணே கோபமா?" என்றேன் அதற்கவளும்**

**"பின்னென்ன வாராதா? பேசாமல் தூங்குங்கள்!"**

என்றுரைத்துப் பின்தன் இமைகள் தமைமூடி

**ஒன்றுமே பேசா துறங்குபவள் போல்நடித்தாள்**
**"ஏக்கம் வருத்தட்டும் என்னை, உனக்கென்ன?**
**தூக்கம் பெரிதென்றால் தூங்கென்றே சீறினேன்**

தலைவி வெட்கமுற்றுத் தடுத்தலும், குறிப்புணர்ந்துகூட வராமல் தலைவி காலம் கடத்துதலும் என்ற இரண்டு நிகழ்ச்சிகளைக் குறிப்பதை நோக்குக. கவிஞரது "இன்பத் தொல்லை!" கவிதையானது,

**வெள்ளி முளைத்திட நேரமில்லை - என்றன்**
**வேதனை தான்இன்னும் தீரவில்லை**
**முள்ளில் படுத்தவன் ஆகுகின்றேன் - ஒரு**
**முத்தம் கொடுக்காமல் தூங்கிகின்றாள்**
**கள்ளை மிகுதியாய் உண்டவன்போல் - நான்**
**காதல் தணியாமல் சோருகின்றேன்**

தலைவன், தலைவி நாணமுற்று விலகுவதால் துன்புறும் நிகழ்ச்சியைக் கவிதை எடுத்துரைக்கின்றது. கவிஞரது "ஒட்டுமரக் கனியே!" கவிதையிலும்,

**தேடித் துடிக்கநான் வாடித் தவிக்கநீ**
**கூடுதல் எப்பொழுதோ!**

என்ற அடி தலைவன் துன்புறும் நிகழ்ச்சியை உணர்த்துவதை நோக்குக.

## நிறைவுரை

பண்பாடுகள் பலவுள்ளன. அவரவர் இனத்திற்கும் சமூகத்திற்கும் ஏற்ற பண்பாட்டை வளர்த்து அதற்கென ஒழுங்குமுறையை அவரவர் வரையறுத்து இயங்குகின்றனர். இஃது இவ்வுலகில் ஒரு போதும் பெரிதளவில் ஒன்றாக இருக்க வாய்ப்பிருக்காது. ஆனால், களவு கொள்வது அல்லது காதல் செய்வது என்பது உலகியல் பண்பாடு. தலைவன் தலைவியை பார்க்கும் வண்ணம் அத்துடன் அவர்கள் களவுகொள்ளும் நிகழ்ச்சிகள் யாவும் மிகுந்த வேறுபாடின்றி இக்காசினியில் இன்றும் நிகழ்ந்துகொண்டே தான் இருக்கின்றன. பார்வையே களவு கொள்வதில் முதன்மை இடம் பிடித்தது என்று தொல்காப்பியர் 3000 ஆண்டுகளுக்கு முன் கூறியதை இன்றும் மானிடன் செய்துகொண்டுதான் வருகிறான். தலைவன் தோழியிடம் கூறுவதும், தோழனிடம் கூறுவதும், தொலைவில் இருக்கும் காதலனையோ காதலியையோ நினைத்து வருந்தும் காதலர்களையும் இன்று நாம் காண இயலும். இதுவே தொல்காப்பியக் களவியல் கோட்பாடு உலகியல் பண்பாட்டை நோக்கி எழுதப்பெற்றவை என்பதற்கான பெருஞ்சான்றாக அமைந்துள்ளது.

கவிஞர் செ.சீனி நைனா முகம்மதுவின் கவிதைகளில் என்னற்ற அளவில் தொல்காப்பியக் களவியல் கோட்பாடுகளைத் தவிர்த்து இன்னும் பலவகையான தொல்காப்பியக் கோட்பாடுகள் புதைந்துள்ளன. இவ்வாய்வில் குறிபிடப்பட்ட சான்றுகள் யாவும் பெருங்கடலில் இருக்கும் ஒரு துளியின் அளவேயாகும். வருங்காலத்தில் தொல்காப்பியக் கோட்பாடுகளை முன்னிருத்தி இறையருட் செ.சீனி நைனா முகம்மதுவின் கவிதை ஆராய வேண்டுமென்பதை இவ்வாய்வு பரிந்துரைக்கின்றது.

## உசாத்துணை

1. சீனி நைனா முகம்மது. (2014). தேன்கூடு முதல் பதிப்பு. உங்கள் குரல் எண்டர்பிரைசு.
2. இலக்குவனார். (2011). தொல்காப்பிய ஆராய்ச்சி முதல் பதிப்பு பூம்புகார் பதிப்பகம்.
3. க. வெள்ளைவாரணன். (2017). தமிழ் இலக்கிய வரலாறு தொல்காப்பியம் முதல் பதிப்பு. பூம்புகார் பதிப்பகம்.
4. மாணிக்கவாசகன். (2016). தொல்காப்பியம் மூலமும் விளக்க உரையும் 5வது பதிப்பு. உமா பதிப்பகம்.
5. மனோன்மணி தேவி அண்ணாமலை. (2019). தொல்காப்பியத் தேன் துமிகள் முதல் பதிப்பு. உமா பதிப்பகம்.
6. பா. இறையரசன். (2018). தமிழர் நாகரிக வரலாறு முதல் பதிப்பு. பூம்புகார் பதிப்பகம்.
7. தமிழண்ணல். (2009). தொல்காப்பியம் 2வது பதிப்பு. மீனாட்சி புத்தக நிலையம்.